குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.419/2020**

வழக்கு சாட்சி எ.ம.சா. 1

2026ம் ஏப்ரல் மாதம் 15–ம் நாள் எதிர்மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாஷ் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 15 .04.2026

முதல் விசாரணை தொடர்ச்சி

22.07.2019ம் தேதி என்னுடைய நகையை கல்யாண் ஜுவல்லரி ஈரோட்டில் ரூ.33,680/–க்கு விற்பனை செய்தும், Joy Alukkas ஜுவல்லரி ஈரோட்டில் நகையை ரூ.95,816/–ற்கு விற்பனை செய்தும், Alukkas ஜுவல்லரி ஈரோட்டில் நகையை ரூ.65,193/–க்கு விற்பனை செய்தும் மொத்தமாக ரூ.1,94,689/–க்கு விற்று வாதி கணக்கிற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி தொகையானது 3 அல்லது 4 நாட்களுக்குள் அவருடைய வங்கி கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்படும் என கூறினார். கல்யாண் ஜுவல்லரி ஈரோட்டில் கடையில் விற்பனை செய்தற்குரிய பில் அசல் தற்போது தாக்கல் செய்கிறேன். **அந்த பில் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. Joy Alukkas ஈரோட்டில் கடையில் விற்பனை செய்தற்குரிய பில் அசல் தற்போது தாக்கல் செய்கிறேன். **அந்த பில் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. Alukkas ஈரோட்டில் கடையில் விற்பனை செய்தற்குரிய பில் அசல் தற்போது தாக்கல் செய்கிறேன். **அந்த பில் எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வாதியிடம் பெற்ற தொகை ரூ.3,00,000/–ற்கு ரூ.1,94,689/–யை செலுத்திவிட்டேன்.

## குறுக்கு விசாரணை

மேலே குறிப்பிட்டுள்ள பரிவர்த்தனைகள் யாவும் IP 16/2019 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நடைபெற்றது என்றால் சரிதான். மேலே குறிப்பிட்டுள்ள பரிவர்த்தனைகள் அடங்கிய தொகை ரூ.1,94,689/– யை திருப்பி செலுத்திய விபரத்தை நொடிப்பு நிலை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எமசாஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணத்தில் என்னுடைய பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கையொப்பம் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான் என்பதற்கு விபரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.4 முதல் 6

வரையுள்ள ஆவணத்தில் P. முருகராஜ் என்பவர் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணத்தில் P.முருகராஜ், ஐயன்தோட்டம், குமராபாளையம் என்று உள்ளது, எமசாஆ.4 ஆவணத்தில் P.முருகராஜ் CN பாளையம் குமராபாளையம் என்று உள்ளது என்றால் சரிதான். இந்த மூன்று விலாசமும் நான் சொல்லிதான் அவர்கள் தட்டச்சு செய்தார்கள் என்றால் சரிதான். முருகராஜ் மனைவியின் தொலைபேசி எண் ஒரு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. PMR Traders நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு முருகராஜ் பெயரை மூன்று ஆவணங்களிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2019ல் ஆந்திரா வங்கியாக இருந்தது தற்போது யூனியன் வங்கியாக மாற்றப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணத்தில் PMR Traders நிறுவனத்திற்கு பணம் அனுப்பியதாக எந்த ஒரு பதிவும் இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ஆவணத்தை நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 09.01.2018 முதல் 30.12.2019 வரை வரவு செலவு கணக்கு உள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் நான் நகையை விற்று பணம் செலுத்திய விபரம் உள்ளதா என்றால் இல்லை. நான் PMR Traders நிறுவனத்திற்கு பணம் அனுப்பியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணத்தில் உள்ள பெயர் P.முருகராஜ் என்ற தனிநபருடைய விலாசம் என்றும் PMR Traders நிறுவனத்திற்கு பணம் அனுப்பியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த IP மனுவில் PMR Traders நிறுவனத்தை சேர்க்கவில்லை என்றால் Account PMR Traders நிறுவனம் என்று உள்ளது அதன் உரிமையாளர் P.முருகராஜ் தான். IP மனுவில் மேலே சொன்னதுபோல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். P.முருகராஜ் விலாசம் வேறு வேறாக தான்கொடுத்துள்ளேன் என்றால் முதலில் அந்த முகவரியில் குடியிருந்தார். எ.ம.சா.ஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணம் தாக்கல் செய்யும்போது P.முருகராஜ் எங்கு குடியிருந்தார் என்றால் Kon தியேட்டருக்கு எதிரே குடியிருந்தார் இருந்தார். புகார்தாரின் மூன்று விலாசம் குறிப்பிட்டுள்ளதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் அவருடைய முழு முகவரி எனக்கு தெரியவில்லை அவர் குடியிருந்ததை வைத்து நான் தான் அந்த முகவரியை சொன்னேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் புகார்தாரர் நகை விற்ற பில் என்று நான் அதை திருடி தற்போது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் புகார்தரர் விலாசம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. PMR Traders நிறுவனத்தின் பெயரில் நொடிப்பு நிலை தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. எ.ம.சா.ஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணத்தில் எந்த கணக்கிற்கு பணம் சென்றதற்கான பதிவு எதுவும் இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.6 பில் இல்லை என்றும் அது Invoice தான் என்று சொன்னால் சரியல்ல. நிறுவனத்தின் முத்திரை உள்ளது. எ.ம.சா.ஆ.6ல் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். ஓரே நாளில் மூன்று கடையில் விற்றதற்கான காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் அந்த நகைகளை அந்தந்த கடையில் எடுத்ததனால் அந்த கடையிலேயே விற்றோம். அந்தந்த கடையில் எடுத்தோம் அந்தந்த கடையில் விற்றோம் என்பதற்கான ஆதாரம் உள்ளதா

என்றால் இல்லை. நான் சொல்வது அனைத்தும் பொய் என்றும் இந்த பில்லையும் எனது சாட்சியத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.5ல் Details of Receiver (Billed to)என்ற இடத்தில் P.முருகராஜ் ஐயன்தோட்டம் நாமக்கல் என்று தான் உள்ளது என்றால் நகையை விற்று அவர் பெயருக்கு மாற்றப்பட்டதால் அவர் பெயர் உள்ளது. அதன் அருகில் Details of consignee (Shipped to ) என்ற இடத்தில் P.முருகராஜ் ஐயன்தோட்டம் நாமக்கல் என்று தான் உள்ளது என்றால் சரிதான். அந்த வகையில் நகையை வாங்கியதும் அவர் தான் விற்றதும் அவர் தான் உள்ளது என்றும் அதனால் தான் என்னுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய நகையை விற்று அவருடைய வங்கி கணக்கு அனுப்பினேன். அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அசல் பில்லை நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3ல் எனக்கும் PMR Traders நிறுவனத்திற்குமான முழு வரவு செலவும் அதில் உள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணத்தில் உள்ள விபரம் எ.ம.சா.ஆ.3ல் காண்பிக்கப்படவில்லை. நொடிப்பு நிலை மனுவில் P.முருகராஜ் பெயரில் எவ்வளவு தொகை காட்டியுள்ளேன் என்றார் ரூ.6,00,000/– காட்டியுள்ளனே். அந்த காலகட்டத்தில் நான் ஊரில் இல்லை வழக்கறிஞர் தான் தொகைகை அதிகமாகட்டியுள்ளார். எந்த காலகட்டத்தில் நான் ஊரில் இல்லை என்றால் 2019 ஆகஸ்ட் முதல் 2021 அக்டோபர் வரை நான் ஊரில் இல்லை. நான் ஊரில் இல்லை என்பதை காண்பிக்க எந்த நீதிமன்றத்திலும் ஆவணம் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். P.முருகராஜ் பெயரில் ரூ.6,50,000/– காட்டியுள்ளேன் ஆனால் தற்போது ரூ.6,00,000/– என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக இருப்பதால் என் சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் சட்டப்ப்படி புகார்தாரருக்கு பணம் செலுத்த கடமைப்படடவன் என்றால் சரியல்ல. புகார்தாரை ஏமாற்றுவதற்காக எ.ம.சா.ஆ.4 முதல் 6 வரையுள்ள ஆவணத்தை தாக்கல் செய்து அவருக்கு எதிராக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியதல்ல.

**மறுவிசாரணை இல்லை**